[1972 மார்ச் 15

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1971-ம் ஆண்டு மே 9-ம் நாளன்று நடந்த கூட்டத்தில் ஆசிரியர் கழகக் குழுவினர் இப்படிப்பட்ட ஒரு யோசனையைத் தெரிவித்தார்கள். மாநிலப் பள்ளி கல்வி வாரியம் அமைத்தால் சரியாக இருக்குமா என்று பல வகைகளில் பரிசீலனை செய்து பார்த்ததில் அரசாங்கத் துறையில் இருப்பதுபோல் அத்தகைய நன்மைகள் ஏற்படாது என்ற காரணத்தினால், இப்பொழுது இருக்கிற முறையே பொருத்தமானது என்று அரசு கருதுகிறது. காரணம், சாதாரணமாக இப்படிப்பட்ட வாரியங்கள் வாணிப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகின்றன. டிரான்ஸ்போர்ட் வாரியம், மின்சார வாரியம் போன்றவைகளை வாரியமாக அமைத்து, அதற்கென்று ஒரு தனிக் குழு அமைத்து நடத்துவது நல்லது. கல்வி போன்ற துறையில் அதற்கென்று ஒரு வாரியம் அமைத்தால், இந்த அரசு என்ன செய்யவேண்டியிருக்குமென்றால், மானியத் தொகையை வாரியத்திடம் கொடுத்து விட்டு, அந்த வாரியம் கல்விக்கான பொறுப்புக்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு செயல்படவேண்டியிருக்கும். அரசுக்கு அதில் அதிகமான தொடர்பு இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். கல்வி வளர்ச்சித் துறையாக இருக்கிற காரணத்தினால் பொதுமக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சட்டமன்றத்தின் முழுக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு அரசுத் துறையினாலேயே இயக்கப்படவேண்டுமென்பதுதான் கருத்து. வேறு எல்லா மாநிலங்களிலும் அரசுத் துறைதான் கல்வித் துறையை இயக்கி வருகிற காரணத்தினாலும், இதற்காக ஒரு வாரியம் அமைப்பது அவ்வளவு பயன்படாது என்ற கருத்தைத்தான் அரசு கொண்டிருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : தற்பொழுது முறைப்படி இந்தக் குழுவில் ஆசிரியர்கள் இடம் பெறுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது அரசாங்கத்தினிடம் தான் இந்தத் துறை இருப்பதால் ஆசிரியர்கள் இடம் பெற இடமில்லை.

ஏழை மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் விநியோகம்

*497 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏழை மாணவர்கட்கு இலவசமாக புத்தகங்களை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழ் நாட்டில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட துவக்கப்பள்ளிகளில் 1 முதல் 3 வகுப்புவரை படித்து மதிய உணவுத் திட்டத்தின் கீழ் உணவு பெறும் ஏழை மாணவ மாணவிகளுக்குப்

1972 மார்ச் 15]

புத்தகங்களும், முதல் வகுப்பில் படிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்குக் கரும் பலகையும் இலவசமாக வழங்கும் திட்டம் சென்ற சில ஆண்டுகளாக அமுலில் இருந்து வருகிறது. இத்திட்டம் 1970-71-ம் ஆண்டு முதல் சென்னை மாநகராட்சித் துவக்கப்பள்ளிகளில் 1 முதல் 3 வரையான வகுப்புகளில் படித்து மாநகராட்சி மதிய உணவுத் திட்டத்தின் கீழ் மதிய உணவு பெற்று வரும் மாண்வ மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இலவசமாக புத்தகம் வழங்கும் திட்டம் 1972-73-ம் ஆண்டு முதல் மாநில அரிசன நலப்பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இவை தவிர, மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள அல்லது ஷெட்யூல்டு வகுப்பு அல்லது பழங்குடியினத்தைச் சேர்ந்த 26,928 மாணவிகளுக்கு 1971-72-ம் ஆண்டில் மாணவியொருத்திக்கு ரூ. 3 விதமும், 1972-73, 1973-74-ம் ஆண்டு ரூ. 5 விதமும் இலவசப் புத்தகங்களும் எழுது பொருள்களும் கொடுக்க ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மாநில அரிசன நலத்துறை, அத்துறையின் கீழுள்ள பள்ளிகளில் படிக்கும் ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களும் கரும்பலகையும் கொடுத்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, துவக்க பள்ளி உள்ள ஏழை மாணவர்களுக்கு இலவச பாட புத்தகங்களை வழங்க அரசு ஆலோசிக்க முன் வருமா? அந்த அளவில் நிதி பற்றாக்குறை இருக்கிற காரணத்தினால், அது தவிர்க்கப்பட வாய்ப்பு இயலாததினால், அந்த நிதி வட்டாரத்திலுள்ள கோவில் களில் உள்ள உபரி நிதியை அரசு பயன்படுத்த ஆலோசிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படுகிறது. இலவச மதிய உணவு பெறுகிற மாணவர்களில் ஒன்றிலிருந்து மூன்றாவது வகுப்பு வரையில் உள்ளவர்களுக்கு இப்பொழுது இலவசமாக புத்தகங்களும், மற்றவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அரிசனநலப் பள்ளிகளில் படிப்பவர்களுக்கு இலவசமாக புத்தகங்களும், மற்றவைகளும் வழங்கப்படுகின்றன. அரிசன நலத்துறை 833 பள்ளிகளை நடத்துகின்றது.

72 பள்ளிகள் பழங்குடியினத்தவர்களுக்காக நடத்தப்படுகிறது. எனவே, முடிந்தவரை இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது.

[1972 மார்ச் 15

மேலும் இருப்பவர்களுக்கு அத்தகைய வசதிகளைச் செய்து தர தனிக் குழுவினர் முன்வருவார்களேயானல் அது வரவேற்கப்படும். ஆலயங்கள் அவற்றையெல்லாம் தாங்கிக் கொள்ளும் அளவுக்கு நிதிநிலை வசதிகளை பெற்றிருக்கின்றனவா என்பது ஆராயப்படவேண்டிய ஒன்று.

அரசு வெளியிடும் பாடப்புத்தகங்கள்

*498 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

அரசு வெளியிடும் பாடப்புத்தகங்களை ஏஜெண்டுகள் மூலம் விற்பனை செய்வதற்குப் பதிலாக பள்ளிகளுக்கே நேரிடையாக விற்பனை செய்யும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1972-73-ம் ஆண்டில் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மேற் கொள்ளவிருக்கும் விற்பனை முறையின் கீழ் சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் மட்டும் அரசுப்பாட நூல்களை நிறுவனமே சில்லறை விற்பனையாளர்களுக்கும் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் நேரடியாக விற்பனை செய்யும். அவர்களுக்கு நிறுவனம் 5 விழுக்காடு கழிவு தரும். பிற மாவட்டங்களில் ஒரு தாலுகாவுக்கு ஒரு மொத்த விற்பனையாளரையும், ஒவ்வொரு தாலுகாவுக்கும் சில சில்லறை விற்பனையாளர்களையும் நிறுவனமே நேரடியாக நியமிக்கும். தாலுகா விற்பனையாளர்களுக்கு நிறுவனம் 10 விழுக்காடு கழிவு தரவேண்டும். அன்னர் தங்களுக்குக் கீழுள்ள சில்லறை விற்பனையாளருக்கு 5 விழுக்காடு கழிவு தரவேண்டும். தங்கள் தாலுகாவிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளுக்கும் 5 விழுக்காடு கழிவுடன் விற்பனை செய்ய வேண்டும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தனிப்பட்ட வியாபாரிகள் அரசாங்கத்திடமிருந்து வாங்கக்கூடிய புத்தகங்கள் எல்லாம் விற்பனையாகுமோ, ஆகாதோ என்ற ஐயப்பாட்டினல், ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் புத்தகங்களை வாங்கி விற்பனை செய்கின்றார்கள். அதனல் முதலில் செல்லும் மாணவர்களுக்குத்தான் புத்தகம் கிடைக்கிறது. பின்னல் செல்லக்கூடியவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே, அந்தந்தப் பள்ளிகளுக்குத் தேவையான புத்தகங்களை அந்தந்தப் பள்ளிகளுக்கே நேரடியாக விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஏற்கெனவே எல்லா மாவட்டங்களிலும் ஒரு விற்பனையாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை, செங்கற்பட்டை பொறுத்த வரையில் அரசு நிர்வாகமே நேரடியாக விநியோகம் செய்கிறது. அதை சில்லறை வியாபாரிகள் பெற்று, விற்பனை